## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31.12.2018 தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரண கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது நவம்பர் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 417**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 31.12.2018**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது நவம்பர் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 418**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 31.12.2018**

**பொருள் எண் 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், மின்கம்பியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியவர்களுக்கு 2018–2019ம் ஆண்டுக்குரிய சீருடைகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 25480/J3/2015 நாள் 13.06.2016ன்படி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கும் மேற்படி பணியாளர்களுககு தையல் கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2514/2017/எச்1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 419**
**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது** **நாள் 31.12.2018**

**பொருள் எண் 4**

இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க 2000 மக்கள் தொகைக்கு ஒரு தற்காலிக மஸ்தூர் வீதம் 13 மஸ்தூர்கள் இந்நகர் மன்ற தீர்மான எண் 317 நாள் 30.04.2018 டிசம்பர் 2018ம் மாதம் வரை பணி செய்ய அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 23.04.2018ந் தேதிய கடிதம் ந.க.எண். 2571/2017/ஜெ1 ல் கொசுக்களினால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் பணி தொய்வில்லாமல் நடைபெற டெங்கு பணியாளர்கள் வருடம் முழுவதும் தொடர்ந்து பணியமர்த்திக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே தற்போது தி–கரன் சமூக தொண்டு நிறுவனம் மூலம் 13 மஸ்தூர்கள் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி டிசம்பர் 2018 மாதத்துடன் முடிவடைய உள்ளதால் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மூன்று மாதங்கள் மட்டும் நீட்டித்து வழங்கவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.3,50,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.530/2018/எச்1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 420**
**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது** **நாள் 31.12.2018**

பொருள் எண் 5

இந்நகராட்சியில் உள்ள பிரிண்டர், டோனர்கள் 12A, 88A டோனர்கள் Refilling செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.11,000/- மற்றும் அனைத்து கணினிகள் Anti-virus பழுதுகள் நீக்கம், பிரிண்டர் பழுதுகள் நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.17,000/-க்கும் மேற்படி பணி Cosmic Point Computer தஞ்சாவூர் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி Cosmic Point Computer தஞ்சாவூர் மூலம் பணி மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.771/2019/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 421

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது நாள் 31.12.2018

பொருள் எண் 6

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இந்தியா மார்க் II பம்புகள் பழுது நீக்கம் செய்ய உதிரிபாகங்கள் வாங்கும் பணிக்கு 25.10.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி | 1,20,000 | 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | ப.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை தெற்கு தெரு | 1,20,000 | 0.12% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.வீ.எழில்மாறன் லெட்சுமாங்குடி என்பவரின் ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் ஏற்கலாம்.

(ந.க.எண். 1186/2018/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 422

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது நாள் 31.12.2018

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர் / ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி